**செய்தி வெளியீடு எண் : 1882** **நாள் : 28.10.2022**

**செய்தி வெளியீடு**

**"2021 அல்லது 2022 ஆண்டுகளில் 12–ஆம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு HCL, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரகம் இணைந்து வழங்கும் வேலைவாய்ப்புடன் கூடிய ஓராண்டு பயிற்சி திட்டம்"**

2021–2022 – ஆம் ஆண்டு 12–ம் வகுப்பில் 60% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு, HCL நிறுவனம் பயிற்சியோடு கீழ்கண்ட பணி வாய்ப்புகளை வழங்குகின்றது. தமிழக அரசின் **"நான் முதல்வன்"** திட்டத்தின் வாயிலாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், அரசுப் பள்ளி மாணவர்கள் 2,000 நபர்களுக்கு HCL Techbee "Early Career Program"க்கான பயிற்சி கட்டணம் முழுவதையும் வழங்குகின்றது.

இத்திட்டத்தின் வாயிலாக மாணவர்களுக்கு:

- தமிழகத்தின் எந்த பகுதியில் இருந்தாலும் பயிற்சியோடு HCL Technologies-ல் கீழ்க்கண்ட முழுநேர பணிவாய்ப்பை வழங்குகின்றது.

> ➢ **Software Developer**
> ➢ **Analyst, Design Engineer**
> ➢ **Data Engineer**
> ➢ **Support & Process Associate**
> ➢ **Service Desk and DPO**

- Internship பயிற்சியின் போது 7வது மாதம் முதல், மாதம்தோறும் ரூபாய் 10,000/– உதவித்தொகையை பெறலாம்.
- பணியில் சேர்ந்தவுடனே துவக்க நிலை ஊதியமாக ஆண்டுக்கு ரூபாய் 1.70 லட்சம் முதல் 2.20 லட்சம் வரை (பணிநிலைக்கு ஏற்றாற்போல்)

HCL Technologies – ல் பணிபுரிந்து கொண்டே உயர்கல்வியை துவங்குவதற்கு **BITS Pilani, Amity** மற்றும் **SASTRA** பல்கலைக்கழகங்களில் வாய்ப்பினை பெற்றுத் தருகின்றது. மேலும் அவர்களின் கல்விக் கட்டணத்தின் ஒரு பகுதியை HCL Technologies நிறுவனம் வழங்குகின்றது. மேலும் இத்திட்டமானது மாணவர்கள் சிறுவயதிலேயே உலகளாவிய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் தங்கள் பணியினை துவங்க வாய்ப்பளிக்கின்றது.

மாநிலம் முழுவதிலும் இந்த HCL "**Techbee**"திட்டத்தின் தேர்வு முகாமினை அக்டோபர் 28 முதல் 30–ம் தேதி வரை, சென்னை, மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு (தகுதியுள்ள மாணவர்களை ) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

<u>மேலும் விபரங்களுக்கு:</u>

சென்னை – 88079 40948. மதுரை – 9788156509. திருநெல்வேலி – 98941 52160. திருச்சி – 94441 51303.

கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் – 89032 45731, 98655 35909.

<u>பதிவு செய்ய:</u>bit.ly/HCLTB-Tamilnadu

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in